தமிழக சட்டப் பேரவை

புதன்கிழமை, 1968 பிப்ரவரி 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

மலை ஏறும் பயிற்சிக் கழகம்

*90. வினா—திரு. எஸ். ஜே. ராமசாமி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நமது மாநிலத்தில் உதகமண்டலத்தில் மலை ஏறும் பயிற்சிக் கழகம் மத்திய அரசு உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எத்தனை மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) : மலையேறும் பயிற்சிக் கழகம் நீலகிரி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் நீலகிரி மாவட்ட விளையாட்டுக் கழகம், உத்திரகாசி நேரு மலையேறும் பயிற்சிக் கழகத்தின் உதவியுடன் 1967-ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 16-ம் தேதியிலிருந்து 72 மாணவர்களுக்கு மலை ஏறும் பயிற்சி அளித்தது.

திரு. இல. பலராமன் : இந்தப் பயிற்சியின் நோக்கம் யாது ? இது எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா? இதற்காக தமிழக அரசுக்கு மத்திய அரசு ஏதாவது மானியம் கொடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மலை ஏறும் பயிற்சி போர் முறைக்குத் தேவைப்படுகின்ற ஒன்றாக இருக்கின்றதால், இமய மலையிலே இந்தப் பயிற்சி நடத்தப்படுகின்றது. நீலகிரியில் இந்தப் பயிற்சியை ஏற்படுத்துவதன் மூலம் பல முறைகளிலும் பயன்படலாம் என்று அரசாங்கத்தின் மூலமாகப் பாதுகாப்புத் துறைக்கு எழுதியதன் பேரில் அவர்கள் குறிப்பிட்ட நாட்களுக்கு பயிற்சி அளிக்கலாம் என்று குறிப்பிட்ட காரணத்தினால் நீலகிரி விளையாட்டுக் கழகம் அதைத் துவக்க முன் வந்தது. உத்திரகாசி நேரு பயிற்சி நிலையம் இதற்கு உதவி செய்கிறது. 1967-ம் ஆண்டு எப்ரல் மாதம் 16-ம் தேதி முதல் மே 27-ம் தேதி வரையில் 72 மாணவர்களுக்கு மலை ஏறும் பயிற்சி அளிக்கப்பட்டது. அதற்காக ரூ. 8,226·41 செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக வேண்டிய வேறு பல பொருள்களையும் இந்த நிலையம் இலவசமாக வழங்கியிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தப் பயிற்சி பெறுவதற்கு கல்வி தகுதி ஏதாவது வேண்டுமா ? தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெறுகிறவர்களுக்கு ஏதாவது நிதி உதவி அளிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவரக்குறிப்பு இல்லை. மலையேறும் பயிற்சிக்கு உடல் தகுதிதான் முக்கியமாக கருதப்படுகிறது. கல்வித் தகுதி அவ்வளவு தேவையில்லையென்று நினைக்கிறேன்.

திரு. டி. மார்டின் : இந்த மலையேறும் பயிற்சி அளிக்க ஏதாவது பாடசாலை உண்டா ? இந்தப் பயிற்சியை உயர்தரப் பாடசாலையில் இணைத்து நாங்குநேரி, களக்காடு முதலிய மலைப் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பயிற்சி பெருமலேயே மலையேறும் பழக்கம் உள்ளவர்களாக சிலர் இருக்கிருர்கள். யார் யார் பயிற்சி பெறவேண்டும் என்று விரும்புகிருர்களோ அவர்களுக்குத்தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. லிப்டை உபயோகப்படுத்தாமலேயே மாடிப்படி உபயோகப்படுத்திஞலேயே அது ஒருவிதமான பயிற்சியாக இருப்பது போன்று அமையும்.

Thiru K. VINAYAKAM ; This kind of mountaineering exercise would be useful for warfare, especially in mountain warfare. What are the possibilities of employment for these trainees ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த நோக்கத்தோடு இதை ஆரம்பிக்கவில்லை. மலையேறும் பயிற்சி பெற விரும்புகிறவர்களுக்கு குறிப்பிட்ட நாட்களில் அதாவது சீசன் நாட்களில் தான் ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது. இதில் 72 பேர்கள் விரும்பிப் பயிற்சி பெற்றிருக்கிருர்கள்.

திரு. எம். சுரேந்திரன் : இப்போது பயிற்சிபெறுகிறவர்கள் என்ன நோக்கத்தோடு பயிற்சி பெறுகிருர்கள் ? பயிற்சி பெற்றவர்களுக்கு ஏதாவது சலுகைகள் வழங்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மற்றைய விளையாட்டுக்களில் ஈடுபடுகிறவர்கள் பெறுகின்ற அடிப்படையிலே தான் இந்தப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. இதில் சலுகைகள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

திரு. ஏ. அ. சுப்பராஜா : மலையேறும் பயிற்சிபற்றி மலையிலே வசிக்கக் கூடியவர்களுக்கு விவரமாகத் தெரியும். ஆகையால் அவர் களுடைய உதவியைப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மலையேறும் பயிற்சியை விரும்புகிறவர்கள் தான் இதில் வந்து சேருகிருர்கள். உத்திரகாசி நேரு நிலையத்தில் இதைக் கற்றுக் கொடுப்பதற்கு வல்லவர்கள் இருக்கிருர்கள். இதிலிருந்து மூவர் இந்தப் பயிற்சி வழங்க ஈடுபட்டிருக்கிருர்கள்.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அப்படிப்பட்ட பயிற்சிப் பள்ளி இப்பொழுது ஏற்படாவிட்டாலும் ஆரம்பப் பயிற்சியாக இருக்கக்கூடிய வகையில் நீலகிரி மலைப்பாங்கான பிரதேசமாக இருப்பதால் இனிமேலாவது மலையேறும் பயிற்சிப் பள்ளியை அங்கு ஏற்படுத்த மத்திய சர்க்காருக்கு நம்முடைய சர்க்கார் சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தியப் பாதுகாப்புத் துறை இந்தப் பயிற்சிப் பள்ளியை அவசியம் இல்லையென்றும் ஆண்டுக்கு ஆண்டு குறிப்பிட்ட நாட்களில் பயிற்சியை மேற்கொள்ளலாம் என்று குறிப்பிட்டதன் பேரில் உத்திரகாசி நேரு நிலையத்தோடு தொடர்புகொண்டு இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது. இதுவரை 72 பேர்கள் பயிற்சி பெற்றிருக்கிருர்கள். ஆண்டுக்கு ஆண்டு விரும்பி வருகிறவர்கள் பயிற்சி பெற்ருலே போதும்.

திரு. எம். எஸ். மணி : பயிற்சி பெறுகிறவர்களுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டால் யார் நஷ்ட ஈடு கொடுப்பது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இது பற்றிய விவரக் குறிப்பு இல்லை.

Footwear Production-cum-*Training Units.*

Thiru A. M. RAJA ; Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the loss incurred in the Footwear Production-*cum*-Training Units in the State during 1965–67 ?